பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

16 03 2025 7 15
ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வடகிழக்கு மாநிலங்களை ஒருங்கிணைத்து வளர்ச்சியை ஏற்படுத்த மத்திய அரசு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

2. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை ஆதார் எண்ணுடன் இணைப்பது குறித்து விவாதிப்பதற்காக தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. கியானேஷ் குமார் சிறப்புக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

3. அமேசான், ஃபிளிப்கார்ட் உள்ளிட்ட மின்னனு வர்த்தக நிறுவனங்களுக்குச் சொந்தமான தில்லி உள்ளிட்ட இடங்களில் இந்திய தர நிர்ணய அமைவனம் சோதனை நடத்தியுள்ளது.

4. மியான்மரில் அந்நாட்டு ராணுவம் நடத்திய விமான தாக்குதலில் 27 பேர் உயிரிழந்தனர்.

5. ஜோர்டானில் நடைபெற உள்ள ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் பங்கேற்கும் 30 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

வடகிழக்கு மாநிலங்களை ஒருங்கிணைத்து வலுப்படுத்தி வளர்ச்சியடையச் செய்ய மத்திய அரசு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

மிசோரம் மாநிலம் **Aizawl**-லில், அசாம் ரைஃபிள்ஸ் படைப் பிரிவுக்கு சொந்தமான நிலத்தை அம்மாநில அரசுக்கு வழங்குவது மற்றும் இந்தப் படைப் பிரிவின் பிராந்திய தலைமையகத்தை இடம் மாற்றுவதற்கான நிகழ்ச்சியில் அவர் பேசினார்.

வடகிழக்கு மாநிலங்களில் சுற்றுலா, விளையாட்டு, விண்வெளி, வேளாண்மை, தொழில்நுட்பம் போன்ற துறைகளில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி மேற்கொண்ட நடவடிக்கைகளால் வடகிழக்கு மாநிலங்களில் இதுவரை இல்லாத அளவுக்கு அமைதி நிலவுவதாகவும் திரு. அமித் ஷா குறிப்பிட்டார்.

<<<<>>>>

வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை ஆதார் எண்ணுடன் இணைப்பது குறித்து விவாதிப்பதற்காக தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. கியானேஷ் குமார் சிறப்புக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

புதுதில்லியில் நாளை மறுதினம் நடைபெற உள்ள இந்தக் கூட்டத்தில் மத்திய உள்துறை செயலாளர் மற்றும் இந்திய தனித்துவ அடையாள அட்டை ஆணையத்தின் தலைமைச் செயல் அதிகாரி உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பங்கேற்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

இந்தியா 2028ஆம் ஆண்டுக்குள் உலகின் 3வது பெரிய பொருளாதார நாடாக உருவெடுக்கும் என்று சர்வதேச நிதிச் சேவைகள் நிறுவனமான **Morgan Stanley** தெரிவித்துள்ளது.

இந்த நிறுவனம் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையுடன் கூடிய பொருளாதார சீர்திருத்தங்கள் இந்த மாற்றத்திற்கு முக்கிய பங்கு வகிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக உற்பத்திக்கான இந்தியா மற்றும் டிஜிட்டல் இந்தியா போன்ற திட்டங்கள் புத்தொழில்களை அதிக அளவில் தொடங்க வகை செய்திருப்பதுடன் நாட்டில் உள்ள கிராமப் பகுதிகளும் உற்பத்தி மையங்களாக உருவெடுத்துள்ளது என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

உலக நாடுகளில் பொருளாதாரம் நிலையற்றதாக உள்ள வேளையில் இந்தியாவின் இந்த வளர்ச்சியை உலக நாடுகள் உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தெலங்கானாவில் 64 மாவோயிஸ்டுகள் அம்மாநில காவல்துறை உயரதிகாரிகள் முன்னிலையில் சரணடைந்துள்ளனர்.

**Bhadradri Kothagudem** மாவட்டத்தில் சரணடைந்த இவர்களில் 16 பேர் பெண்கள் என்று காவல்துறை மண்டல ஐஜி. திரு. சந்திரசேகர ரெட்டி தெரிவித்துள்ளார்.

சரணடைந்தவர்களின் மறுவாழ்வுக்கான உடனடி உதவித்தொகையாக தலா 25 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தற்போது சரணடைந்தவர்களுடன் சேர்த்து அம்மாநிலத்தில் கடந்த 2 மாதங்களில் 122 மாவோயிஸ்ட்கள் சரணடைந்துள்ளதாகவும் திரு. சந்திரசேகர ரெட்டி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தங்கக் கடத்தல் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள நடிகை ரன்யா ராவின் வளர்ப்புத் தந்தையான கர்நாடக டிஜிபி திரு. ராமச்சந்திர ராவை கட்டாய விடுப்பில் செல்ல அம்மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

தற்போது கர்நாடக காவலர் வீட்டுவசதி வாரிய தலைவராக பணியாற்றி வரும் திரு. ராமச்சந்திர ராவ், அந்தப் பணியில் இருந்து உடனடியாக விடுவித்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நடிகை ரன்யா ராவ் அடிக்கடி வெளிநாடுகளுக்கு சென்று வந்தபோது, டிஜிபியின் வளர்ப்பு மகள் என்ற முறையில் விமான நிலையத்தில் அவருக்கு அளிக்கப்பட்ட சலுகைகளை தவறாக பயன்படுத்தி தங்கக் கடத்தலில் ஈடுபட்டார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

<<<<>>>>

சர்வதேச மின்னணு வர்த்தக நிறுவனங்களுக்குச் சொந்தமான இடங்களில் இந்திய தர நிர்ணய அமைவனம் சோதனை நடத்தியுள்ளது.

அமேசான், ஃப்ளிப்கார்ட், மீஷோ, மின்த்ரா, பிக் பாஸ்கட் போன்ற நிறுவனங்களுக்குச் சொந்தமான தில்லி, குருகிராம், லக்னோ உள்ளிட்ட இடங்களில் உள்ள கிடங்குகளில் நடத்தப்பட்ட இந்த சோதனையின்போது பாதுகாப்பற்ற மற்றும் சான்றிதழ் பெறாத பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தர நிர்ணய அமைவனத்தின் சான்றிதழ் பெறாத இந்தப் பொருட்கள் நுகர்வோருக்கு பாதிப்பை ஏற்படுத்துவதை தடுக்கும் நோக்கில் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வாடிக்கையாளர்கள் இதுபோன்ற நிறுவனங்களில் பொருட்களை வாங்குவதற்கு முன் **BIS** செயலி மூலம் அந்தப் பொருட்களைப் பற்றிய தகவல்களை அறிந்துகொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

<<<<>>>>

நியூசிலாந்து பிரதமர் திரு. **Christopher Luxon** இந்தியாவில் அரசுமுறைப் பயணமாக இன்று புதுதில்லி வருகிறார்.

20ஆம் தேதி வரை இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்து இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

தமது இந்தப் பயணத்தின்போது இரு நாட்டு மக்களிடையேயான நேரடி உறவை வலுப்படுத்துவது குறித்தும் விவாதிக்கப்பட உள்ளதாக நியூசிலாந்து பிரதமர் கூறியுள்ளார்.

மேலும் அவருடன் அமைச்சர்கள், அதிகாரிகள் அடங்கிய உயர்நிலை குழுவினரும் இந்தியா வருகின்றனர்.

<<<<>>>>

டிஜிட்டல் மாற்றத்திற்கான 2025ஆம் ஆண்டுக்கான விருதுக்கு இந்திய ரிசர்வ் வங்கி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து நாட்டின் மத்திய வங்கி இந்த விருதை வழங்க உள்ளது.

இந்தியாவின் ப்ரவா மற்றும் சாரதி ஆகிய டிஜிட்டல் திட்டங்களை செயல்படுத்தியதற்காக இந்த விருது ரிசர்வ் வங்கிக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் டிஜிட்டல் மாற்றங்கள் ரூபாய் நோட்டுகள் பயன்பாட்டை பெருமளவில் குறைத்திருப்பதாக இங்கிலாந்து மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மியான்மர் நாட்டில் ராணுவம் நடத்திய வான்தாக்குதலில் 6 குழந்தைகள் உட்பட 27 அப்பாவி மக்கள் உயிரிழந்தனர்.

ஜனநாயக ஆதரவு போராட்டக் குழுவினரை குறிவைத்து அந்நாட்டின் சிங்கு பகுதியில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் 30க்கும் மேற்பட்டோர் காயமடைந்திருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

உள்நாட்டில் தயாரிக்கப்படும் முதலாவது செமிகண்டக்டர் சிப், இந்த ஆண்டிற்குள் பயன்பாட்டிற்கு வரும் என்று மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

சென்னை ஐ.ஐ.டி.-யில் மாணவர்களுடன் கலந்துரையாடிய அவர், அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 4 சிப்-கள் வெளியாகும் என்றும், இவை டெஸ்லா, **Volkswagen** உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்களுக்கு வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் வேளாண் தொழிலுக்கு மிகவும் உதவிகரமாக உள்ளதாகவும், மகாராஷ்டிரா மாநிலம் இதனை வெற்றிகரமாக செயல்படுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் உள்ள அறிவாற்றல் மிக்க இளைஞர்கள் அனைத்து துறைகளுக்கும் தேவையான தரவுகளை உருவாக்கும் திறன் பெற்றவர்களாக உள்ளனர் என்றும் அவர் கூறினார்.

**Deep Fake** போன்றவற்றில் இருந்து பாதுகாப்பு அளிப்பதற்கான நெறிமுறைகள் விரைவில் வகுக்கப்படும் எனவும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<>>>>

ரஷ்யாவும் - யுக்ரைனும் நேற்று பரஸ்பரம் வான்தாக்குல் நடத்தியுள்ளன.

இரு நாடுகளும் நூற்றுக்கும் மேற்பட்ட ட்ரோன்களைப் பயன்படுத்தி தாக்குதல் நடத்தியுள்ளது.

யுக்ரைன் உடனான 30 நாள் போர்நிறுத்தம் தொடர்பாக ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புடின், அமெரிக்க தூதர் ஸ்டீவ் உடன் பேச்சுவார்த்தை நடத்திய நிலையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

லுக்கோயில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்கு அருகே ட்ரோன்களின் பாகங்கள் சிதறிக் கிடந்ததாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

ஜோர்டான் நாட்டின் அம்மானில் நடைபெற உள்ள சீனியர் ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் பங்கேற்கும் 30 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் தீபக் புனியா, **Antim Panghal. Manisha** உள்ளிட்ட வீரர், வீராங்கனைகள் இடம்பெற்றுள்ளதாக இந்திய மல்யுத்த சம்மேளனம் தெரிவித்துள்ளது.

-------------

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் மும்பை அணி கோப்பையை வென்றது.

மும்பையில் நேற்று நடைபெற்ற தில்லி அணிக்கு எதிரான இறுதிப் பேட்டியில் முதலில் விளையாடிய மும்பை அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 149 ரன் எடுத்தது.

கேப்டன் ஹர்மன் ப்ரீத் கவுர் 44 பந்துகளில் 66 ரன் எடுத்து அணிக்கு வலு சேர்த்தார்.

பின்னர் 150 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய தில்லி அணி, 9 விக்கெட் இழப்புக்கு 141 ரன் மட்டுமே எடுத்தது.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் மும்பை அணி இரண்டாவது முறையாக கோப்பையை கைப்பற்றியது.

------------

இந்திய ஹாக்கி அணியின் கேப்டன் ஹர்மன் ப்ரீத் சிங் மற்றும் மகளிர் அணியின் கோல்கீப்பர் சவீதா புனியா ஆகியோருக்கு இந்த ஆண்டிற்கான பல்பீர்சிங் முதுநிலை ஹாக்கி வீரர் விருது வழங்கப்பட்டது.

1975ஆம் ஆண்டு ஆடவர் உலகக்கோப்பையை வென்ற இந்திய ஹாக்கி அணிக்கு மேஜர் தியான்சந்த் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

**<<<<The End>>>>**